# தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

## Translation : Naeem Syed

பின் வருவது ஹாங்காங் டிவியில் ஒளிபரப்புபவரும் ஒரு புகழ் பெற்ற குழந்தை உளவியலாளர் தன் மகனுக்கு எழுதிய கடிதமாகும். அவருடைய அறிவுரை, சிறுவர், பெரியவர், பெற்றோர், பெண் பிள்ளைகளையும் சேர்த்து, அனைவருடைய கவனத்தையும் கவரக்கூடியதாக இருக்கிறது.

அன்புள்ள மகனே



1. உன்னை விரும்பாதவர், உன்னுடன் நன்றாக பழகாதவர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளாதே. உன்னை நன்றாக நடத்தும் பொறுப்பு, உன் தாயையும் என்னையும் தவிர, வேறு யாருக்கும் கிடையாது.

உன்னிடம் அன்பாகவும் நன்றாகவும் பழகுவோரை ஒரு பொக்கிஷமாக பாவித்து அவர்களுக்கு நன்றியுடையவனாக இரு. அத்துடன் நீ ஜாக்கிரதையாக இருப்பதும் தேவையே, ஏனெனில், அனைவரும் ஒவ்வொரு அசைவிலும் ஒரு நோக்கத்தைகொண்டிருப்பர். ஒரு நபர் உன்னுடன் நன்றாக பழகினால், அவர் உன்னை உண்மையில் விரும்புகிறார் என அர்த்தமாகாது. கவனமாக இருந்து, அவசரப்பட்டு அவரை நண்பனாக மதிப்பிடாதே.

2. தவிர்க்க முடியாதவர் அல்லது இன்றியமையாதவர் என்று யாரும் இலர். நீ உன் உடைமையாக்கிக்கொள்ள இவ்வுலகில் ஒன்றும் கிடையாது. நீ இக்கருத்தை புரிந்து கொண்ட பட்சத்தில், உன்னை சூழ்ந்துள்ள மக்களுக்கு நீ

தேவைப்படவில்லையானாலும், அல்லது, நீ விரும்பும் ஒரு பொருளையோ, வேறு நபரையோ நீ தொலைத்து விட்டாலும், வாழ்வில் சுலபமாக பயணிக்க இயலும்.

3. வாழ்கை சொற்பமானது

உன் வாழ்க்கையை நீ இன்று வீணாக்கினால், நாளை அது உன்னை விட்டு போவதை நீ காண்பாய். எவ்வளவு முன்னதாக வாழ்க்கையை பொக்கிஷமாக்குவாயோ அவ்வளவு அதிகமாக அதை அனுபவிப்பாய்.

4. அன்பு ஒரு நிலையற்ற, மாறுகின்ற உணர்வு. இந்த உணர்வு, ஒருவருடைய மன நிலையை பொருத்து நாளடைவில் மங்கிவிடும். அப்படி அன்பு என்று அழைக்கப்படவள் உன்னைவிட்டு பிரிந்து சென்றால், பொறுத்திரு, நேரம் உன் வேதனையையும், துக்கத்தையும் துடைத்து விடும்.

அன்பையும், அழகையும் தேவைக்கும் அதிகமாக மிகைப்படுத்தாதே. அன்பிலிருந்து விடுபட்டால் அதன் துக்கத்தையும் மிகைப்படுத்தாதே.

5. வெற்றி பெற்றவர்களில் அநேகமானோர் நல்ல கல்வி பெற்றிருக்க மாட்டார். அது நீ கடுமையாக படிக்காமல் வெற்றி பெற முடியும் என அர்த்தமில்லை! நீ பெற்ற அறிவு தான் உன் வாழ்வின் ஆயுதம்.

ஒருவர் கந்தலிலிருந்து செல்வந்தன் ஆகலாம். ஆனால் அதற்கு அவர் கன்தலிலிருந்து தொடங்கவேண்டியதிருக்கிறது.



6. என் முதுமையில், பொருளாதார ரீதியாக என்னை நீ ஆதரிப்பாய் என நான் எதிர்பார்க்கவில்லை. நானும் உன்னை உன் வாழ்க்கை முழுவதும் பொருளாதார ரீதியாக

ஆதரிக்க இயலாது.  நீ வளர்ந்து விட்டால், உன் ஆதரவாளனாக என் பொறுப்பு முடிவடைந்து விடுகிறது.  அதன் பிறகு, நீ ஏழையாக இருந்து பொது போக்குவரத்தில் பயணிப்பாயா அல்லது செல்வந்தனாக இருந்து உன் சொந்த லிமோசின் காரில் பயணிப்பாயா என்பதை முடிவெடுத்துக்கொள்.

7. உன் வார்த்தைகளுக்கு நீ மரியாதை கொடு, ஆனால், மற்றவரும் அவ்வாறு செய்ய வேண்டுமென எதிர்பாராதே.  நீ மற்றவருக்கு நல்லவனாக இருக்க முடியும், ஆனால், மற்றவர், உன்னுடன் நல்லவர்களாக இருக்க எதிர்பாராதே. நீ இதை புரிந்து கொள்ளவில்லை என்றால், அவசியமற்ற தொந்தரவுகளுக்கு ஆளாகிவிடுவாய்.

8. நான் பல வருடங்கள் லாட்டரிகள் வாங்கினேன், ஆனால், பரிசு ஒன்றும் பெறவில்லை.  நீ பணக்காரனாகவேண்டுமானால், கடுமையாக உழைக்கவேண்டும் என்பதையே அது காட்டுகிறது.  இலவச உணவு கிடையாது.

9. நான் உன்னுடன் எவ்வளவு நேரம் இருந்தாலும், நாம் ஒன்றாக இருந்த நேரத்தை பொக்கிஷமாக மதிப்போம்.  நாம் மீண்டும் அடுத்த வாழ்வில் சந்திப்போமா என்பதை அறியோம்.